# வீடு என்னும் பள்ளியிலே..........

அன்பான பெற்றோர்களே!
இப்பகுதியில் படிக்கப் போகும் பல விஷயங்கள் ஆச்சர்யமாகவும்,அதிர்ச்சியாகவும் இருக்கலாம்.அவற்றை நன்றாக மனதில் பதியவைத்து ,யோசித்து உங்கள் பிள்ளையின் வளர்ச்சிக்குப் பயன்படுத்துங்கள்.இங்கே சொல்லப்படும் பல விஷயங்களை நான் என் மாணவர்களிடம் பயன்படுத்தி மிகவும் மகிழ்ச்சியான பள்ளி வாழ்க்கையை வாழ்ந்து வருகிறேன்.

உருவத்தினை வைத்து எடை போடாதே...!!!
அடிக்கடி நாம் கேட்கும் வாசகம் இது.பிள்ளையின் உருவத்தினை வைத்து ,அதற்கு ஒன்றும் தெரியாது என்று தவறாக எண்ணிவிடக் கூடாது.அதே வேளையில் வயதுக்கு மீறிய விஷயங்களில் அவனை ஈடுபடவைக்கக் கூடாது.
உதாரணம்:ஒரு பெற்றோர் தன் மகளுக்கு ஏன் ஒருசில உறவினர்களைப் பிடிக்கவில்லை என்று விளக்கமாகக் கூறியுள்ளார்.அதன் விளைவு அச்சிறுமி அவர்களை மதிப்பதே இல்லை.ஒரு கல்யாண விழாவில் அச்சிறுமியைப் பற்றி அவள் தாயிடமே உறவினர்கள் புகார் கூறினர்.அதைக் கேட்ட அச்சிறுமி என்ன சொன்னாள் தெரியுமா?
`` சாரி ஆன்ட்டி!!!அப்பா தான் எப்ப பார்த்தாலும் வீட்ல அம்மாவுடன் உங்களைப் பற்றி எல்லாம் கண்டதை எல்லாம் பேசி,என்னிடம் உங்களுடன் பேச வேண்டாம் என்பார்.....`` என்றாள்.அதன் விளைவு ?நீங்களே என்ன ஆகியிருக்கும் என்று புரிந்து கொள்ளுங்கள்.

அதே வேளையில் பல நல்ல விஷயங்களில் பிள்ளைகளை ஈடுபடுத்தும் பெற்றோர்கள் ஏராளம்.என் அமெரிக்க நண்பரின் ஆறு வயது மகன்,எந்தக் கடைக்குச் சென்று ஏதாவது வாங்க வேண்டும் என்றால் உடனே விலையை விசாரிப்பான்.அவன் அறிவுக்குத் தக்கவகையில் விலை அதிகம் ---குறைவு என்று தெரிந்து கொண்டபின்னரே நம்மிடம் அப்பொருளை வாங்கித்தரச் சொல்வான்.

சிறிய உருவத்துள் மறைந்திருக்கும் பெரிய ஞானிகள் நம் பிள்ளைகள்.மாண்டிசொரிப் பள்ளியில் அவர்கள் சிறிய பாப்பாக்களாக ~வெறுமனே கொஞ்சி நடத்தப் படுவதில்லை.அவர்களுக்குள் உள்ள நாளைய மனிதனை அடையாளமாக வைத்தே மதிக்கப் படுகிறார்கள்.ஆனால் அதே வேளையில் அவர்களின்,வயது,அறிவு வளர்ச்சி,மனப்பக்குவம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு அவர்களுக்குரிய பாடங்களும்,பயிற்சிகளும் திட்டமிடப் படுகின்றன.

உதாரணம்:இரண்டரை வயதுக் குழந்தை வந்தவுடனேயே ஏ,பி,சி கற்றுக்கொள்ள முடியாது.பல முன்னோடிப் பயிற்சிகள் பலவற்றை அக்குழந்தை செய்து முடித்தபின் தான் ஏ,பி,சிக்கு வரமுடியும்.கவனமாகக் கேளுங்கள்.,அதே பிள்ளையின் ஆங்கில அனுபவம் ஓரளவிற்கு மற்றபிள்ளைகளைவிட நன்றாக இருக்கும்பட்சத்தில் விரைவில் ஆங்கில எழுத்துகளுக்கு வரலாம்.
அதனால் தான் மாண்டிசொரிக் குழந்தைகள் வயதிற்குத் தேவையான,அதிகமான அறிவுடன் வளர்கிறார்கள்,பள்ளியில் இருக்கும் பல கல்விச் சாதனங்கள் பல ,மற்ற கல்வித்திட்டங்களில் பெரிய வயதிற்கு உரியவையாக இருப்பதைக் காணலாம்.ஆறு வயது மாணவன் மிக நீண்ட வகுத்தல்,பெறுக்கல் கணக்குகள் போடுவான்.,கவிதை எழுதுவான்.

ஏன் தெரியுமா?
மாண்டிசொரிக் கல்வியில் அறிவு வளர்ச்சியை வயதைக் கொண்டு மதிப்பிடுவதில்லை.நம் புராணத்தில் கூறப்படும் ``பிஞ்சிலேயே பழுத்த அறிவு ஜீவியான முருகனாகவே`` எனக்கு இக்குழந்தைகள் தோன்றுகிறார்கள்.

எனவே வயதிற்கு ஏற்ப அறிவுப் பசி எடுக்கும் பிள்ளைகளை ஆசிரியர்களும் பெற்றோர்களும் தங்கள் சுயநோக்கிலும்,சோம்பேறித் தனத்தாலும் தடுத்துவிட வேண்டாம் என்கிறார் மாண்டிசொரி.

**ஒப்பிடுதல் என்ற கான்சர் நோய்:**

இன்று இந்த நாட்டில் பலருக்கு உள்ள கான்சர் வ்யாதி ''ஒப்பிடுதல்'' ஆகும்.எப்பொழுது பார்த்தாலும் தன் பிள்ளையை மற்ற பிள்ளைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்துப் பார்த்து பெற்றொர்கள் தங்கள் மரியாதையைக் குறைத்துக் கொள்கின்றனர்.உலகில் நாம் அனைவரும் ஒரே போல் வாழ்ந்தால் என்ன ஆகும்?பைத்தியம் பிடித்து விடும் அல்லவா?

இயற்கையாகவே உங்கள் பிள்ளையின் திறன்களை அடையாளம் காணுங்கள்.,ஊக்குவிய்யுங்கள்.அவனை அவன் வழியில் செல்லவையுங்கள்..

உதாரணம்:என் ஏழு வயது மாணவன் ஒருவனுக்குக் கணக்கு ~பாடம் சற்று மெதுவாகத் தான் புரியும்.நானும் அவன் பெற்றோரும் மெதுவாக அவனுடன் வேலை செய்து பயிற்சி அளித்தோம்.தேர்வில் வேறு வினாத்தாள் அவனுக்குத் தயார் ஆனது.இப்படியே இரண்டு ஆண்டுகள் சென்றன.கடைசியில் அவன் சாதாரண மாணவர்களின் நிலைக்கு உயர்ந்தான்.ஒரு தேர்வில் ,'' சார்,இம்முறை எனக்கு ஸ்பெஷல் வினாத்தாள் வேண்டாம்!மற்ற மாணவர்களுக்கான வினாத்தாளே எனக்கும் தாருங்கள்''...என்றானே பார்க்கலாம்!!!அது தானே மாண்டிசொரிக்கல்வி தரும் மனதைர்யம்,மனவுறுதி,தன்னம்பிக்கை?!

எனவே பிள்ளையின் திறமையை முழுமையாக்க மெதுவாகவே முயற்சி செய்யவும்.பொறுமையே வெற்றிதரும்.உங்கள் மகனின் வரையும் திறன் பக்கத்துவீட்டுப் பிள்ளைக்கு இருக்காமல் போகலாம் அல்லவா?

என் மாணவர்கள் பலர் அறிவியல் பாடங்களைப் படிக்க விரும்புவதில்லை.பத்தாவது முடிக்கும் வேளையில் அவர்களின் பெற்றோர்கள் எங்களைத் துணைக்கு அழைப்பர்.,அவர்கள் பிள்ளைகளுக்கு அறிவியல் பாடம் எடுக்க அறிவுறுத்த.

ஆனால் இன்றுவரை என் மாணவர்கள் பல வித்யாசமான படிப்புகளைப் படித்து உலகின் பல இடங்களில் வாழ்கிறார்கள்.காரணம் பிள்ளைகளின் இஷ்டப்படி அவர்களின் திறமையை நம்பி நாம் விடுவதால் தான் என்பேன்.

உதாரணம்:பத்தாம் வகுப்பில் என்பது சதவீதம் எடுத்த என் மாணவி ஒருத்தி,மேற்கொண்டு ஆர்ட்ஸ் எடுத்தாள்.அவள் அப்பா என்னிடம் புலம்பாத நாளே இல்லை.அவள் சென்னையின் மிக உயர்ந்த கல்லூரியில் சேர்ந்து ''கலைப் பயிற்சி'' பெற்றாள்.இன்று நம் நாட்டின் மண் பாண்டக் கலை நிபுனிகளுள் அவளும் ஒருத்தியாக அரசால் பணியமர்த்தப் பட்டுள்ளாள்,இப்ப என்ன சொல்றீங்க சார்?

எனவே பிள்ளைகளை ஒப்பிடுவதை தயவு செய்து நிறுத்துங்கள்,ப்லீஸ்!!!

**உங்கள் குழந்தையின் திறமைகள் முழுமையடைய நீங்கள் செய்ய வேண்டியவை:**

*அவனை உங்களின் வயதை,உடல் வலிமையைப் பயன் படுத்தி அடிமைப் படுத்த வேண்டாம்.உங்களை விட வயதான உங்கள் அப்பாவோ,மாமனாரோ சொல்வதை ஏற்கும் மனப்பக்குவம் நம்மிடம் உள்ளதா?அதற்காக பிள்ளையை அப்படியே விட்டுவிடச் சொல்லவில்லை.

*ஒவ்வொரு செயலையும் காரணம் காட்டி மேற்கொள்ளவையுங்கள்.
உதாரணம்:பல காலமாக என் பள்ளியில் பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வு நடத்த ‘‘சென்டர்’’ தரப்படவில்லை.காரணம் பிள்ளைகள் சுதந்திரமாக ஆடிப்பாடித் திரிவர் என்று மாண்டிசொரி அமைப்பினைத் தவறாகப் புரிந்து கொண்டு மறுத்தது கல்வித் தலைமையகம்.ஆனால் நாங்கள் நம்பிக்கையுடன் எங்கள் மாணவர்களிடம் தேர்வின் முக்யத்துவத்தினையும்,சட்டவிதிகளையும்,கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளையும் விளக்கினோம்.

பல கட்டுப்பாடுகள் விதித்து நம்பிக்கையே இல்லாமல் ‘‘சென்டர்’’ தகுதி அளிக்கப்பட்டது.முதல் நாள் பொதுத்தேர்வு....பள்ளி இடைவேளை...என்ன ஆனது தெரியுமா?

இரண்டரை வயதுப் பிள்ளைகள் பலர் ஏழு எட்டாம் வகுப்புகளில் வந்து,’’ ஷ்..ஷ்...ஷ்..அமைதி!பெரிய அண்ணாஸ் ஏதோ எழுதறாங்களாம்,டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்.....’’ என்றனர்.தேர்வுமுடியும் வரை பள்ளி நடக்கிறதா இல்லையா என்னும் அளவு அமைதியை நிலைநாட்டினர்

பல பெற்றோகள் தாங்கள் சொல்வதைத் தங்கள் பிள்ளை கேட்பதில்லை என்கிறார்கள்,இது தவறு,கேவலம்.நாம் சொன்ன சொல் படி வாழ்ந்தால் பிள்ளையும் நம் சொல்படி கேட்கும்.

*மாண்டிசொரி மாணவர்கள் வகுப்பிற்குள் கத்த மாட்டார்கள்.ஏன் தெரியுமா?ஆசிரியர்கள் தங்கள் குரலை எக்காரணம் முன்னிட்டும் பலமாக உயர்த்தமாட்டார்கள்.ஒரு மாணவனைக் கூப்பிடும் வேளையிலும் அருகில் சென்றே கூப்பிடுவர்.பல வேளைகளில் அழகான சிறு மணி அடிக்கப்படும்.மாணவர்களின் கவனம் ஈர்க்கப்படும்.

‘‘நாயே..பேயே..’’ என்று நாம் அழைத்தால்,நம் பிள்ளைகளும் அப்படித்தானே பேசுவார்கள்?

* அடுத்து வீட்டு வேலைகளில் அவனுக்குத் தக்க வேளைகளைப் பகிர்ந்து கொடுங்கள்.கடைக்குச் சென்று வந்தால்,காய்கறிகளைப் பிரிப்பதில் அவனையும் ஈடுபடவையுங்கள்.துணிகளை மடிக்கும் போது,அவனிடம் சில கர்ச்சிப்புகள்,ட்ராயர்கள் தந்து மடிக்க வையுங்கள்...என்னடா வீட்டில் பிள்ளையின் சத்தத்தையே காணோமே என்று பக்கத்து வீட்டு மாமி வந்துவிடுவார்.
இதைத் தான் மாண்டிசொரி பள்ளிகள் செய்கின்றன.வயதுக்கு ஏற்ற வேலையும் விளையாட்டும் அவர்களை அமைத்திப்படுத்தும்,அவர்களுள் ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டுவரும்.

* உங்கள் பிள்ளை ஒரு நாளை அனுபவிக்க போதிய அவகாசம் கொடுங்கள்.
என் மாணவி ஒருத்திக்கு ஐந்து வயது.பலமுறை அவள் நட்சத்திரங்கள் பற்றியே பேசுவாள்.பின் தான் புரிந்தது,அவளுக்கு இரவில் மாடியில் சென்று உலாவ ஆசை.பெரிய வீடும் மாடியும் உள்ளது,ஆனால் ஒருநாள் கூட அவள் பெற்றோர்கள் மேலே கூட்டிச் செல்ல விரும்பியதில்லை.காரணம் இவள் என்ன பெரியதாக மாடிக்குச் சென்று பார்க்கப் போகிறாள் என்ற மதிப்புக்குறையீடு தான்.
பெற்றோர்களே!உங்களுக்கு மரமோ மட்டையோ பெரிதாகாது.ஆனால் உங்கள் பிள்ளைக்கு மரமும் மட்டையும் கிளியும் வாத்தும் கல்லும் எல்லாம் முதன்முதலில் கண்ணில் படுகின்றன.புரிகிறதா?நீங்கள் பலகாலம் கஷ்டப்பட்டு முதன்முதலில் நீங்கள் பார்க்கும் ‘‘பெரிய லாபமும்’’ ,உங்கள் மகன் முதன்முதலில் பார்த்துப் பரவசம் அடைந்த கிளியும் ஒன்றுதான்.

*குழந்தைக்குள் இயற்கையாகவே உள்ள கலையார்வத்திற்கு மதிப்பளியுங்கள்.
அவன் கிறுக்குவதை ரசியுங்கள்,அதை விட்டுவிட்டு,’’ ஆமாம்..பெரிய ரவிவர்மானு நினைப்பு ‘‘என்று மனச்சூடு வைக்காதீர்கள்.

*உங்கள் குழந்தை செய்யும் ஒவ்வொரு செயலையும் முடிந்தவரை ரசித்து கவனியுங்கள்.உரிய நேரத்தில் அவர்களின் வேலையை அங்கீகாரம் செய்யும் பெற்றோரே இறுதிவரை பிள்ளைகளின் அன்பிற்கும் மரியாதைக்கும் உரியவர்கள் ஆகிறார்கள் என்பார் மாண்டிசொரி.

* அவ்வாறு பெற்றோர்களின்,அன்பான அங்கீகாரம் இல்லாத பிள்ளைகளே பின்னாளில் பல இடங்களில் பலரிடம் அவர்களின் கவனத்தினை ஈர்க்கும் ‘‘கவன ஈர்ப்பிகளாக’’ மாறுகிறார்கள்.அவர்களை ஆசிரியர்களை அனுகும் போது ஆசிரியர்கள் அவர்களை அரவணைத்து வழிநடத்துவது மிகவும் முக்கியம் ஆகும்.
உதாரணம்:முதன்முதலாக தன் தலையைத் தானே வாரிக் கொண்டுவரும் பிள்ளையைப் பாராட்டவும்.பின் மெதுவாகக் கண்ணாடியில் காட்டி முடியை மேலும் அழகாகச் சீவக் கற்று தாருங்கள்.திட்ட வேண்டாம்...கற்றுத் தாருங்கள்!

*‘‘ இவன் இப்படித் தான்,இவனை மாற்றவே முடியாது’’ என்று அவநம்பிக்கை அவன் முன்பே சொல்லப்பட வேண்டாம்.பல பெற்றோர்கள்,பெருமைக்காகவும் இவ்வாறு பேசுகிறார்கள்.அது பயங்கரமான தவறு.அது நாளை அவனைப் பிடிவாதக்காரனாக மாற்றும்.

*இதற்கெல்லாம் மேலாக உங்கள் பிள்ளை இப்போதே இருபத்தி ஐந்துவயது வாழ்க்கையை வாழ ,நீங்கள் கனவு காண்பது தான்.

* ‘‘ கடந்த கால நினைவுகள் பல சோகம் தரும்.எதிர்காலம் பலசமயம் பயம் தரும்.எனவே இப்போது நாம் வாழ்கின்ற நிகழ்காலத்திலேயே நம் மனது இருக்கட்டும்,அதை நாம் அனுபவித்து வாழ்வோம்!இக்காலம் மட்டுமே நமது சொந்தம்!’’......இந்த சித்தாந்தம் தான் குழந்தை.
அதனால் தான் குழந்தை தெய்வமாகப் போற்றப்படுகிறது.

*ஆனால் நாம் எப்போதும் எதிர்காலத்திலே வழ்கிறோம்.அதைக் குழந்தை மீது வலுக்கட்டாயமாகப் புகுத்துகிறோம்.அது மன்னிக்க முடியாத மகாபாவம் என்கிறார் மாண்டிசொரி.

*குழந்தை தவறு செய்யும் போது திட்டாமல் அடிக்காமல்,சொல்லிப் புரியவைப்பது எளிது.நம்புங்கள் நான் அதில் வெற்றி காண்கிறேன்.ஆனால் என் குரலில் மிதமான கடுமை இருக்கும்.ஆனால் அதட்டி உருட்ட மாட்டேன்.தவறுக்கான காரணங்கள் கேட்பேன்.தண்டிப்பேன் எப்படி?

குழந்தைக்கு மிகவும் பிடித்த விசயத்தினைத் தடுத்துவிடுவேன்.அதைவிட வேறு பெரிய தண்டனையும் தேவையோ?

உதாரணம்:பலமுறை எடுத்துக் கூறியும் கேட்காத ஒரு சிறுமி கண்ணாடித் தட்டினை உடைத்து விட்டாள்.மாண்டிசொரியின் தோழி[சிறுமியின் அம்மா] தந்த தண்டனை என்ன தெரியுமா?ஒருமணி நேரம் அவளுடன் பேசவே இல்லை.அதைவிட அதீத தண்டனை வேறு இல்லை.

‘‘என் குழந்தையின் பழக்கவழக்கங்கள் எப்படி மாறும்,ஒழுக்கமே அவனுக்கு வராதா?’’ என்ற பல பெற்றோர்களின் -ஆசிரியர்களின் கூக்குரல்கள் கேட்கின்றன.உண்மை தான்.பதிலை மாண்டிசொரியே சொல்கிறார் அடுத்த பகுதியில்.

நன்றி!!!